Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஐப்பசி 12    ( 28 - 10 - 1992 )    புதன்கிழமை    ஓசை 253

## கோட்ட, மாவட்ட ரீதியில் வினா வங்கிகள் அமையும்

இம் மாத முடிவினுள் கோட்ட, மாவட்ட ரீதியில், வினா வங்கி அமைக்குமாறும் இவ் வினா வங்கியில் தயாரிக்கப்படும் வினாக்களை நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ள ஆண்டிறுதிப் பரீட்சைக்கும், பயிற்சிப் பரீட்சைக்கும் வினாக்களாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம்,ஏ.சி. மொகைதீன் சகல கோட்ட மாவட்டகல்விப் பணிபாளர்களையும் பணித்துள்ளார் கோட்ட ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் நியமிக்கப்பட்டுள்ள சேவைக்கால ஆசிரியர்கள் தமது செயலமர்வில் பங்கு பற்றும் ஒவ்வொரு ஆசிரியர்கள் மூலம் தயாரிக்கப்படும் வினாக்களை அமைத்து (4ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு தமிழ் கிராமங்களில் சிங்கள ராணுவம் வெறியாட்டம்



விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களை பொறுப்பேற்கும் உத்தியோகபூர்வ பத்திரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி சன்கு பிரான்வா கையெழுத்து இடுவதையும், அவருக்கருகில் கடற்புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் மறவனும், இரு செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் பக்கத்தில் இருப்பதையும் மேலே உள்ள படத்திலும், விடுவிக்கப்பட்ட மூன்று சிங்கள மீனவர்களை கீழே உள்ள படத்திலும் காணலாம்.

### ஹெரோயின் கடத்திய பெண் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்தி வந்த பெண்ஒருவர் தற்போது கட்டுநாயக்கா போதைப் பொருள் தடுப்பு பொலிஸ் அதிகாரிகளினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப் பெண்மணி தீவிர மருத்துவபரிசோதனைக்கு உட்படுத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு அப்பாவித் தமிழர் படுகொலை; கிராமங்களிலிருந்து விரட்டியடிப்பு

(மட்டககளப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு கிராமங்கள் மீது கொடூரமான முறையில் தாக்குதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் அக்கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்களை அங்கிருந்து முற்றாக விரட்டியடித்துள்ளனர். இராணுவத்தினர் இக்கிராமங்கள் மீது சுற்றி வளைத்து மேற்கொண்ட தாக்குதலின் போது ஆறு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை காலை பாலையடிவெட்டை, வெல்லாவெளிஆகிய இராணுவமுகாம்களிலிருந்துவெளியேறிய இராணுவத்தினர் காக்காச்சிவெட்டை, பலாச்சோலை ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர். கிராமங்களைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் முதலில் துப்பாக்கிப் பிரயோகமும், ஏறிகணைவீச்சும் நடத்தினர். பின்னர் கத்தியால் வெட்டியும், குத்தியும் மக்களைக் கிராமத்தை விட்டு விரட்டினர்.

இராணுவத்தினரின் இக்கோரத் தாக்குதலுக்கு ஆண்களும், பெண்களுமாக ஆறு பேர்கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

இக்கோரத் தாக்குதலில் காக்காச்சிவெட்டையைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயான லட்சுமி [வயது 40], (4 ஆம் பக்கம் பார்க்க)

### களுவாஞ்சிக்குடியில் 12 தமிழர்கள் கைது

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவ விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து பன்னிரண்டு பொதுமக்களைக் கைதுசெய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த 25 ஆம் திகதி மேற்படி கிராமத்தைச் சுற்றிவளைத்தே அதிரடிப் படையினர் இப்பொதுமக்களைக் கைது செய்துள்ளனர். இதில் மூவர் பலமாகத் தாக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மனிதநேயத்தின் அடிப்படையில் மீனவரை விடுதலை செய்கிறோம்

(யாழ்ப்பாணம்)

''உறுதி மிக்க தலைவனினால் வளர்த்தெடுக்கப்பட்ட எங்கள் இயக்கம் மனித நேயத்தைக் கடைப்பிடித்து இவர்களை விடுதலை செய்கின்றது ஆனால் சிறிலங்கா அரசு இதைக் கடைப்பிடிப்பதாக இல்லை''

இவ்வாறு நேற்று சிங்கள மீனவர்களின் விடுதலை பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பின் போது கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் இவ்வாறு தெரிவித்தார். இவர் தொடர்ந்து கூறுகையில்,

இவர்கள் கைது செய்யப்பட்ட காலம் தொடக்கம் நாங்கள் இவர்களுக்கு வேண்டிய சகல தேவைகளையும் நிறைவேற்றி இன்று விடுதலை செய்துள்ளோம் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களையும் விடுதலை செய்துள்ளோம் என்பது உங்களுக்குத் தெரியும் ஆனால் சிறிலங்கா அரசு எங்கள் மீனவர்களை இன்னும் கைது செய்துகொண்டு இருக்கின்றதே ஒழிய விடுதலை செய்வதாக இல்லை இன்று எங்கள் மீனவர்கள் கடலில் ஒரு மைல் தூரங்கூட செல்ல முடியாத நிலை இருந்தும்கூட இவர்களை இன்று எங்கள் தலைவரின்வேண்டுகோளிற்கிணங்க மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்கின்றோம்

## மூன்று சிங்கள மீனவர் புலிகளால் விடுதலை

## தெல்லிப்பழையில் குண்டுவீச்சு வீடுகள் பல நாசம்

(சுன்னாகம்)

நேற்றுக் காலை 11.00மணியளவில் சுன்னாகம், தெல்லிப்பழை, ஏழாலைப் பகுதிகளை வட்டமிட்ட மூன்று குண்டு வீச்சு விமானங்கள் தெல்லிப்பழை இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகளில் இரு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. அச்சம ஒவசியர் ஒழுங்கை, ஆனைக்குட்டி ஒழுங்கை ஆகிய பகுதிகளில் நான்கு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இக்குண்டுத் தாக்குதலினால் அப் பகுதிகளில் இருந்த பொது மக்களின் ஏழு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

மேற்படி விமானங்கள் சுன்னாகம் நகரப் பகுதியில் பல கடைகளும் அவசரம், அவசரமாகப் பூட்டப்பட்டன.

எனினும், சந்தைப் பகுதி நண்பகல் 12.00க்குப் பின்னர் சகஜநிலைமைக்கு திரும்பியது. பல நாட்களின் பின்னர் வலி. வடக்கில் விமானத் தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (11)

மீனவர்களை இழேஉள்ள படத்திலும் காணலாம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மனிதநேயத்தின் அடிப்படையில் மீனவரை விடுதலை செய்கிறோம்

(யாழ்ப்பாணம்)
''உறுதி மிக்க தலைவனி னால் வளர்த்தெடுக்கப்பட்ட எங்கள் இயக்கம் மனித நேய த்தைக் கடைப்பிடித்து இவர் களை விடுதலை செய்கின்றது ஆனால் சிறிலங்கா அரசு இதைக் கடைப்பிடிப்பதாக இல்லை''

இவ்வாறு நேற்று சிங்கள மீனவர்களின் விடுதலை பற் றிய பத்திரிகையாளர் சந்திப் பின் போது கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் இவ்வாறு தெரிவித் தார். இவர் தொடர்ந்து கூறுகையில்,

இவர்கள் கைது செய்யப் பட்ட காலம் தொடக்கம் நாங்கள் இவர்களுக்கு வேண் டிய சகல தேவைகளையும் நிறைவேற்றி இன்று விடுதலை செய்துள்ளோம் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களையும் விடுதலை செய்துள்ளோம் என்பது உங் களுக்குத் தெரியும் ஆனால் சிறிலங்கா அரசு எங்கள் மீன வர்களை இன்னும் கைது செய்துகொண்டு இருக்கின் றதே ஒழிய விடுதலை செய்வ தாக இல்லை இன்று எங்கள் மீனவர்கள் கடலில் ஒரு மைல் தூரங்கூட செல்ல முடியாத நிலை இருந்தும்கூட இவர் களை இன்று எங்கள் தலை வரின் வேண்டுகோளிற்கிணங்க மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

## மூன்று சிங்கள மீனவர் புலிகளால் விடுதலை

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளி னால் கடந்த பத்து மாத கால மாக தடுத்து வைக்கப்பட்டி ருந்த மூன்று சிங்கள மீனவர் கள் நேற்று உத்தியோக பூர்வ மாக விடுதலை செய்யப்பட் டனர்.

மேற்படி மீனவர்கள் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் யாழ். மாவட்ட கடற்புலி கள் அரசியல் துறைத் தலைமைக் காரியாலயத்தில் வைத்து கடற்புலிகள் அரசி யற் பொறுப்பாளர் திரு. மறவன் அவர்களால் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத் தினரிடம் ஒப்படைக்கப்பட்ட னர்.

அமிர்தாசன் சந்திரதாச (வயது 28) திருமலை, சமித பால பிறின்ஸ்பியாந்த (வயது 24) திருமலை, லிறீசுமித் (வயது 18) திருமலை ஆகிய மூன்று மீனவர்களுமே மனி தாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர்களாவர். (பா)

## மீனவர்கள் கப்பல் மூலம் புறப்பட்டனர்

(வடமராட்சி)
தமிழீழ விடுதலைப் புலிக ளினால் பராமரிக்கப்பட்டு வந்த மூன்று சிங்கள மீனவர் கள் நேற்று கப்பல் மூலம் சொந்த இடங்களுக்குப் புறப் பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் துயர்களை சிங்களவருக்கு எடுத்து கூறுவோம்

## விடுதலையான மீனவர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்] -
நாம் எமது சொந்த இடங் களுக்குத் திரும்பிச்செல்றதும் இங்குள்ள மக்கள் சிறிலங்கா படையினரால் நாளாந்தம் அனுபவித்துவரும் துன்ப துய ரங்களை எமது மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்கள் மத்தி யில் ஒரு புரிந்துணர்வை ஏற் படுத்துவோம். இவ்வாறு விடு தலைப் புலிகளினால் நேற்று விடுதலை செய்யப்பட்ட திரு மலையைச்சேர்ந்த மூன்று சிங் கள மீனவர்களும் நமது நிரு பரிடம் கூறினர்.

இம்மூன்று மீனவர்களும் மேலும் கூறுகையில்,

கடந்த காலத்தில் ஜே.வி. பியினரை ஒழித்தல் எனும் போர்வையில் சிறிலங்கா அர சின் ஆயுதப்படையினர் மேற் கொண்ட தாக்குதல்களுக்கு நாங்களும், எங்களது உறவி னர்களும் இலக்கானதுடன் கைதுசெய்யப்பட்டு பயங்கர சித்திரவதைகளுக்கும் ஆளா னோம். எங்கள் உறவினர்கள் சிலர் இவர்களால் கொல்லப் பட்டு ரயர் போட்டு எரிக்கப் பட்டனர். அவர்கள் நாமும் தமது இன மக்கள் என்ற உண ர்வுகூட இன்றியே ஈவிரக்கமற்ற முறையில் எம்மைக்கொடுமைப் படுத்தினர். எம்மையே இவ் வளவு தூரம் சித்திர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நவம்பரில் சர்வமதகுழு யாழ். வரவுள்ளதாம்

(கொழும்பு)
நாட்டின் இனப்பிரச்சி னைக்கு ஒரு தீர்வை கொண்டு வரும் பொருட்டு நவம்பர் மாதம் சர்வ மதகுழு ஒன்று யாழ்ப்பாணம் வர முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக 'லங் காதீப' செய்திகள் தெரிக் கின்றன.

இவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவரி களை கண்டு பேச்சுவார்த்தை யில் ஈடுபடுவார்கள் எனவும், இக் குழுவில் அங்கம் வகிக்கும் முக்கிய உறுப்பினர் 'லங்கா தீப' பத்திரிகைக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இக் குழுவினர் யாழ்ப்பா ணம் செல்ல முன்னர் பல பௌத்த பிக்குகளின் ஆலோச னைகளை பெறுவார்கள் என் றும் அத்துடன் திரு. காமினிஜய சூரியாவைச்சந்தித்துவிடுதலை ப்புலிகளின்முன்னால் வைக்கப் படும் திட்டத்தைப் பற்றி ஆலோசனை பெறப்பட்டுள

(4 ஆம் பக்கம் பார்க்க)

[illegible] வெளிஆகிய இராணுவமுகாம் களிலிருந்துவெளியேறிய இரா ணுவத்தினர் காக்காச்சி வெட்டை, பலாச்சோலை ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத் தினர். கிராமங்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் [illegible] வெட்டியும், குத்தியும் மக் களைக் கிராமத்தை விட்டு விரட்டினர்.

இராணுவத்தினரின் இக் கோரத் தாக்குதலுக்கு ஆண் களும், பெண்களுமாக ஆறு பேர்கொல்லப்பட்டனர். நால்

# தெல்லிப்பழையில் குண்டுவீச்சு வீடுகள் பல நாசம்

(சுன்னாகம்)
நேற்றுக் காலை 11.00மணி யளவில் சுன்னாகம், தெல்லிப் பழை, ஏழாலைப் பகுதிகளை வட்டமிட்ட மூன்று குண்டு வீச்சு விமானங்கள் தெல்லிப் பழை இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகளில் இரு தட வைகள் குண்டு வீச்சுத் தாக்கு தல்களை நடாத்தின. அச்சம யம் உலங்கு வானூர்தியொன் றும் அப் பகுதிகளில் வட்ட மிட்டு திரிந்தது.

ஒவசியர் ஒழுங்கை, ஆனைக் குட்டி ஒழுங்கை ஆகிய பகுதி களில் நான்கு குண்டுகள் வீழ் ந்து வெடித்தன. இக்குண்டுத் தாக்குதலினால் அப் பகுதிக ளில் இருந்த பொது மக்களின் ஏழு வீடுகள் பலத்த சேதம டைந்தன.

மேற்படி விமானங்கள் சுன் னாகம் நகரப் பகுதியில் பல தடவைகள் வட்டமிட்டுத் திரிந்ததால், நகரப்பகுதியிலி ருந்த மக்கள் சிதறி ஓடினர். கடைகளும் அவசரம், அவசர மாகப் பூட்டப்பட்டன.

எனினும், சந்தைப் பகுதி நண்பகல் 12.00க்குப் பின்னர் சகஜநிலைமைக்கு திரும்பியது. பல நாட்களின் பின்னர் வலி. வடக்கில் விமானத் தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. (11)

# களுவாஞ்சிக்குடியில் 12 தமிழர்கள் கைது

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடிப் பகுதியைச் சுற்றிவளை த்த சிறிலங்கா இராணுவ விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து பன்னிரண்டு பொதுமக்களைக் கைதுசெய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த 25 ஆம் திகதி மேற் படி கிராமத்தைச் சுற்றிவளை த்தே அதிரடிப் படையினர் இப்பொதுமக்களைக் கைது செய்துள்ளனர். இதில் மூவர் பலமாகத் தாக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டுள்ள தாகவும் ஏனையோர் இது வரை விடுதலை செய்யப்பட வில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

# கிரனைட் வீச்சிற்கு ஓர் அதிரடிப்படை பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத் திலுள்ள களுவாஞ்சிக் குடிப் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகளின் ஆதர வாளர் ஒருவர் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலி னால் ஓர் இராணுவம் கொல் லப்பட்டதுடன் மற்றொரு இராணுவம் படுகாயமடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பாராத இடங்களில் புலிகள் தாக்குகின்றனர்

வடபகுதியில் இராணுவத் தின் கீழ் வந்த பகுதிகளில் முட்கம்பி வேலி, மதில் சுவர் அமைத்து ஸ்திரப்படுத்தும் போது விடுதலைப் புலிகள் திடீர் திடீரென வேறு இடங் களை தாக்குகின்றனர் என்று சிறிலங்கா பாதுகாப்பு வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறே மன்னார், உயி லங்குளத்திற்கும் அடம்பனுக் கும் இடையே விடுதலைப் புலிகள் இராணுவத்தை தாக் கினர் என்றும், மட்டக்களப்பி லும்இவ்வாறுஇடம் பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



வீரவேங்கை ஞானதாஸ்

கடந்த 22ஆம் திகதி அன்று ஆனையிறவுஉப்பள சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது காயம டைந்த வீரவேங்கை ஞான தாஸ் (பால்ராஜ் அரியதாஸ் கிளிநொச்சி) வீரச்சாவடைந் தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# தோல்விகளுக்குப் பொறுப்பேற்று ஹமில்டன் பதவிவிலக வேண்டும்

## - 'ஐலன்ட்' தெரிவிப்பு

நடந்து முடிந்த சம்பவங்க ளுக்கும், இப்போது நடக் கின்ற சம்பவங்களுக்கும் முத லில் பாதுகாப்புச் செயலாள ரும், அவரையடுத்து கூட்டுப் படை நடவடிக்கைத் தலை மைச் செயலகமும் பொறுப் பேற்க வேண்டும். ஆனால் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் நோக்கு மிடத்து முப்படைத் தளபதி களிடமிருந்து, குறிப்பாக இராணுவத் தளபதியிட மிருந்து பாதுகாப்புச் செய லாளருக்கும், கூட்டுப் படைத் தளபதிக்கும் எந்த விதமான ஒத்துழைப்பும் கிடைக்க வில்லை எனத் தெரிகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக

# வெளிவாரி மாணவருக்கு எதிராக உள்வாரிமாணவர் போர் கொடி

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழக வெளி வாரி மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் வழங் கப்படும் ''தேவைகள்'' ''சலு கைகள்'' இப்பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களது உரி மைகளைப் பாதிப்பதாக உள் ளது என்றும் இவ்வாறு உள் வாரி மாணவர்களுக்கு ஏற்ப டும் பாதிப்புக்களுக்கு கண்ட னம் தெரிவித்தும் வெளிவாரி மாணவர்களுக்கு வழங்கப்ப டும் ''தேவைகள்'' ''சலுகை கள்'' என்பவற்றை எதிர்த் தும் எதிர்ப்பியக்கம் உருவாகி வருகிறது.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றி யம் இவ்வாறு வெளிவாரி மாணவர்களுக்கு வழங்கப்ப டும் சலுகைகள், சேவைகள் என்பன உள்வாரி மாணவர்க ளைப் பாதிக்கும் என்று கூறி இவற்றை எதிர்த்து சில தீர் மானங்களை நிறைவேற்றி யுள்ளது. நேற்று நடைபெற்ற மேற்படி ஒன்றியத்தின் கூட் டத்திலேயே இத்தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டிருக்கி றது.

இப்பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களுக்கு உள்வாரி மாணவர்களைப் போன்று மாணவர் அடை யாள அட்டைகள் வழங்கக் கூடாது, மாணவர் பதிவுப் புத்தகம் வழங்கக் கூடாது, பல்கலைக்கழக நூலகத்தில் புத்தகங்களைப் படிக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**உருவாகும் வாரிசுகளுக்கு உயிலாக மரம் வைப்போம**

## வரி விளம்பரம்


### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

### விளாம்பழங்கள் தேவை

நன்றாக பழுத்த விளாம் பழங்கள் கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சுரபி உணவு பதனிடல் நிறுவனம், பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு. கோப்பாய். (சி-5315)

### பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு.ப. — 2 பி. ப. (3215)

### சைவசமயப் பாடப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களே

ஆண்டு 8 சைவநெறி வினா விடை 25 ரூபா. ஆண்டு 9 சைவநெறி வினாவிடை 20 ரூபா. தொகுப்பு: கு பரராசசேகரம் (பி. ஏ.) வெளியீடு: சரசாலை இந்து இளைஞர் மன்றம். சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும். (3353)


### உலர் உணவு விநியோகம்

[குருநகர்]

இராணுவ நடவடிக்கைகளால் விதவையானோர் நோயாளர், வயோதிபர் ஆகிய 300 குடும்பங்களுக்கு உலர், உணவு பொருளகளை மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கி வருகிறது

குருநகர் புனிதயாகப்பர்- புதுமைமாதா ஆலய பங்குத் தந்தை வண-பி-எம் இம்மனுவேல் அடிகளார் நடுநிலைய இயக்குநர் வண- எம் ஈ பயஸ் அடிகளாரின் உதவியைப் பெற்று குருநகர் பகுதியில் இருக்கும் மேற்படி 300 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகிறார் (21)

# அரசின் போக்கினாலேயே தீவிரவாதிகள் உருவாகின்றனர்

## சிங்கள கல்விமான்கள் கருத்து

(கொழும்பு)

எந்தவழிகளிலும் பணம் வந்தால் போதும் என்ற நோக்கிலேயே 1970 இல் இருந்த அரசு செயற்படாததினால் நாட்டில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியாத நிலை உருவாகியது எனக் களனிப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஜயந்த செனவிரத்ன கத்தோலிக்க ஆயர்மாரினால் ஒழுங்கு செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மாநாட்டில் உரையாற்றும் போது தெரிவித்தார். நேற்று முன்தினம்மாலைநடைபெற்ற மேற்படி மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசின் தவறான கொள்கைகளினாலேயே எமது சமுதாயம் மிகவும் பின்தங்கியுள்ளது. நகரில் உள்ள இளைஞர்களுக்கு சலுகைகள் வழங்கும் போது கிராமத்து இளைஞர்கள் புறக்கணிக்கப் பட்டனர் இதனாலேயே பாதிக்கப்பட்ட கிராமத்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். சுதந்திர வர்த்தக வலயத்தில் எந்தவொரு தொழிற்சங்க சட்டங்களும் இல்லாமையால் பெண்கள் அங்கு அடிமைகள் போல் தொழிலாற்ற வேண்டியுள்ளது என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நீதிபதி நிமால் புஞ்சியேவா கொலை, கொள்ளையை விட மிகவும் மோசமானதே பொது மக்கள் காணாமல் போவதாகும். இவ்வாறு காணாமல் போவதால் ஒரு தாய் தனது மகனைத் தேடவேண்டியுள்ளது. மனைவி கணவனைப் பற்றி அறிய முற்படுவதும் பிள்ளைகள் தந்தையைப்பற்றி அறிய முற்படும்போது அவர்களது மனோநிலை பாதிப்படைகிறது இதனால் இவர்கள் தீவிரவாதிகள் பக்கம் இணைய வேண்டியநிலை உருவாகிறது. அத்துடன் காணாமல் போனோருடைய குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பின்தள்ளப்படுகிறது. இதனால் பல சமூகப் பிரச்சினைகள் தோன்றுகின்றன காணாமல் போவோர் சித்திரவதைக்குள்ளாவதால் அவர்களது மனோநிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே காணாமல் போவோர் பற்றி உடன் உறவினர்களுக்கு அறிவிப்பதுடன் உறவினர் பற்றிய விபரங்களை காணாமல் போவோருக்கும் அறிவித்தல் வேண்டும் என்றார்.

# சமனலவேவ நீர்த்தேக்க அணைக்கட்டில் உடைப்பு

(கொழும்பு)

சமனலவேவ நீர்த்தேக்கத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இதனால் பெரும் ஆபத்து நேரிடலாம் என்றும் தெரியவருகின்றது.

இதே வேளை இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்ட போது பேராசிரியர் குலதுங்க வழங்கிய யோசனைகள் கவனத்திற்குஎடுக்கப்பட வில்லை எனவும், இதனால்தான் இந்த உடைப்பு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

மேலும் இந்த உடைப்பு ஏற்பட்டமை தொடர்பாகவும் இந்த வேலைத்திட்டம் தொடர்பாகவும் ஆராய தனிநபர் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஜே. எப். எம். சூஸா தலைமையின் கீழ் இக் கமிஷன் அமைக்கப் பட்டுள்ளது

# சிறிலங்காப் படைக்கு சிகரெட்கூட இல்லையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குயுத்த முனைகளில் கடமையிலுள்ள படைகளுக்கு மிகச்சாதாரண தேவைப் பொருள்கள் கூட வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. யுத்த முனையில் படைகளுக்குச் சிகரெட் கூட வழங்கப்படவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன

இராணுவத்தினர் ஒரு பக்கெற் சிகரெட்டுக்கு 100 ரூபா கொடுத்து கடற்படையினரிடம் பெற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

சலுகை விலையில் வரி இல்லாமல் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்படும் சிகரெட் பொதிகளை சில இராணுவ நலன்புரி அதிகாரிகள் தென்பகுதியில் விற்பனை செய்தது பிடிபட்டதைத் தொடர்ந்து இராணுவத்துக்கு வழங்கப்பட்ட சிகரெட் நிறுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை, வருட இறுதியை அண்மித்தும் கூட வடக்கு- கிழக்கு முனையில் இராணுவத்துக்கு இந்த வருடம் வழங்கப்பட வேண்டிய சீருடையில்ஒன்றுதானும் இது வரை வழங்கப்படவில்லை. அத்துடன் இந்த வருடத்துக்குத் தமக்கு வழங்க வேண்டிய கால்உறைகள், கன்வெஸ் சப்பாத்துகள், துவாய்கள் ஆகியன கூடத் தரப்படவில்லை என்று வடக்கு- கிழக்கு யுத்த முனையில் சேவையாற்றும் இராணுவத்தினர்முறைப்பாடு செய்துள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி அரச சார்பற்ற நிறுவனங்களின் ... ளது

இதில் விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள் மற்றும் கிருமி நாசினிகள் நியாயமான விலையில் விற்பனை ...

# ஹிஸ்புல்லா எம். பிக்கு ஐ.தே.க. பண உதவி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஹிஸ்புல்லா கட்சிக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கு மத்திய மாகாணத்தைச்சேர்ந்தஆளும் கட்சி அரசியல்வாதிகள் பண உதவி புரிந்திருப்பதாக நம்பகரமாக தெரியவந்துள்ளது

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளே இந்தப் பண உதவியைப் புரிந்ததாகத்தெரிகின்றது.

# தீவக ப.நோ. கூ. சங்கங்கள் நிவாரணம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

... பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கு ஜேர்மன் பல்கலை. பட்டப்படிப்பு அனுமதி

(மானிப்பாய்)

மேற்கு ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கு விண்ணப்பிக்கும்படி "மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை'' கோரிக்கை விடுத்துள்ளது. இதன்படி விண்ணப்பதாரிகள் க. பொ. த. சாதாரண தரத்தில் குறைந்தது 06 பாடத்தில் சித்தி அடைந்து இருத்தல்வேண்டும். அவற்றுள் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். திறமைச்சித்தி பெற்ற பாடங்களுள் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் அடங்க வேண்டும். மேற்கூறிய சாதாரண தரத்துடன் க. பொ. த. உயர் தரத்திலும் 04பாடங்களில் சித்திஅடைந்து இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் பெறுபேற்று பத்திரங்களின் மூலப் பிரதிகளை மட்டுமே மே ஜேர்மன் பல்கலைக்கழகங்களிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கொழும்பில் உள்ள பரீட்சைத்திணைக்களத்தில் CT/1, CT 2 என அழைக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அதில் குறிப்பிட்ட கட்டணத்தைக் காசுக்கட்டளையாகச் செலுத்தினால்மாணவர்களின் பெறுபேற்று பத்திரங்களின் மூலப்பிரதிகள் இப் பரீட்சைத் திணைக்களத்தினாலேயே குறிப்பிடப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கபபடும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களும், பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் பெறுபேற்று பத்திரங்களும் தை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கோடைகால படிப்பிற்காகவும், ஆடிமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாரிகால படிப்பிற்காகவும் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்.

பட்டப்படிப்பிற்கான கால எல்லை ஆகக் குறைந்தது 04 வருடங்கள் ஆகும்- ஒரு வருடத்தில் குறைந்தது 05 முதல் 06 மாதம் வரை விடுதலைக் காலங்களாகும்- இவ்விடுதலை நாட்களில் எல்லாவெளிநாட்டு மாணவர்களுக்கும்வேலைசெய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

மேற்கு ஜேர்மன் பல்கலைப் பட்டமானது இலங்கை பல்கலைப்பட்டத்திலும் உயர்தரம் வாய்ந்ததாக இலங்கையில் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விபரங்களை அறிய விரும்புகின்றவர்கள் W GUTSS, Nd Ramstadter Strabe 179A-2, 6100 Darmstadt West Ger- -many, Telefon 06151-45685 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (07)

### மாணவமன்றம்

(யாழ்ப்பாணம்)

வளர்ந்தோர் கல்விதொழிற்திறன் அபிவிருத்திட்டத்தின் கீழ் வைத்தீஸ்வராக்கல்லூரியில நடைபெற்றுவரும் பத்திரிகையாளர் பயிற்சிநெறி மாணவர்கள் பத்திரிகையாளர் மாணவமன்றம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இம் மன்றத்தின் தலைவராக எஸ். சுதர்சனும் செயலாளராக சிறிசந்திரராசாவும் பொருளாளராக செல்வி கு. அமுதாவும் இதழாசிரியராக செல்வி வனிதாவும் தெரிவு செய்யப்பட்டனர் [42]

### மகளிர் பொற்கணக்கு

[மல்லாகம்]

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில், சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை, மகளிர் பொற்கணக்கு நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது பிரதி செவ்வாய் கோறும் இது இயங்கி வருகிறது. (09)


## 45-ம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 18 - 3 - 1972 |  | 13 - 9 - 1992 |

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த,

### வீரவேங்கை கதிரவன்

[தம்பிப்பிள்ளை சசிகுமார்]

வீரமரண நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், இயக்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்வதோடு,

இன்று 28-10-92 புதன்கிழமை நடைபெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலியிலும், அந்தியேட்டிக்கிரியையிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அராலி வீதி, 4-ம் குறுக்கு, புதிய குடியிருப்பு. -குடும்பத்தினர் (3515)

## நினைவு கூருகின்றோம்

1992-10-28

## உலர் உணவு விநியோகம்

[குருநகர்]

இராணுவ நடவடிக்கைகளால் விதவையானோர் நோயாளர், வயோதிபர் ஆகிய 300 குடும்பங்களுக்கு உலர், உணவு பொருளகளை மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கி வருகிறது

குருநகர் புனிதயாகப்பர்-புதுமைமாதா ஆலய பங்குத் தந்தை வண-பி-எம் இம்மனுவேல் அடிகளார் நடுநிலைய இயக்குநர் வண- எம் ஈ பயஸ் அடிகளாரின் உதவியைப் பெற்று குருநகர் பகுதியில் இருக்கும் மேற்படி 300 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகிறார் (21)

## அரச ஊழியருக்கு சம்பள உயர்வு

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி மாதம் முதல் சம்பள உயர்வு வழங்கப்பட இருக்கின்றது என்றும், தனியார் துறையினரும் இச்சம்பள உயர்வை வழங்க நேரும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வாழ்க்கைச் செலவு உயர்வைக் கருத்திற் கொண்டு இச் சம்பள உயர்வு வழங்கப்படுவதாகவும், ஒரு இடையாள உயர்வாக இருக்காது என்றும் அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## முறைசாராக் கல்வி பயிற்சி நெறி

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் தேசிய பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் யா / யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பின்வரும் குறுகியகாலப் பயிற்சிநெறிகள் நடைபெறவுள்ளன சைக்கிள் திருத்துதல், புத்தகம் கட்டுதல், விவசாயத்தில் சுயவேலை, உணவு -போஷாக்கு தட்டச்சு திருத்துதல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல்.

இப் பயிற்சிகளைப் பயில விரும்பும்பாடசாலையை விட்டு விலகியோர், அதிபரிடம்பயிற்சி நெறிகளை குறித்து விண்ணப்பங்களைக் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர்,

## மண்ணெய் 15 ரூபாவிற்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இன்று முதல் குடுப்ப அட்டைக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 15 ரூபாவுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க. சிறிலின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---

தெரிவிக்கின்றன

இராணுவத்தினர் ஒரு பக்கெற் சிகரெட்டுக்கு 100 ரூபா கொடுத்து கடற்படையினரிடம் பெற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

சலுகை விலையில் வரி இல்லாமல் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்படும் சிகரெட் பொதிகளை சில இராணுவ நலன்புரி அதிகாரிகள் தென்பகுதியில் விற்பனை செய்தது பிடிபட்

...டம் வழங்கப்பட வேண்டிய சீருடையில்ஒன்றுதானும் இது வரை வழங்கப்படவில்லை. அத்துடன் இந்த வருடத்துக்குத் தமக்கு வழங்க வேண்டிய கால்உறைகள், கன்வெஸ் சப்பாத்துகள், துவாய்கள் ஆகியன கூடத் தரப்படவில்லை என்று வடக்கு- கிழக்கு யுத்த முனையில் சேவையாற்றும் இராணுவத்தினர்முறைப்பாடு செய்துள்ளனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கமநல சேவை நிலையங்களை அமைத்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக கிளிநொச்சி நகரில் மேற்படி விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதில் விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள் மற்றும் கிருமி நாசினிகள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது விரைவில் இந்நிலையங்கள் பரவலாக திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் இவற்றால் விவசாயிகள் கணிசமான அளவில் நன்மையடைவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரஞ்சன் விஜயரத்னா

## கொலை வழக்கு விசாரணை டிசம்பரில் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புஅமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவின் கொலை வழக்கு விசாரணை டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதிவரை தொடர்ச்சியாக இவ்விசாரணைகள் நடைபெறும் என்று கொழும்புமேல் நீதிமன்ற நீதிபதி ஜெயசூரியா அறிவித்துள்ளார்

திரு.ரஞ்சன் விஜயரத்தினாவைக் கொலைசெய்யவிருப்பது பற்றிய தகவல்களைத் தெரிந்திருந்தும் அதுபற்றி தகவல் கொடுக்கத் தவறியமை, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து பயிற்சிபெற்றமை ஆகிய குற்றங்கள் எதிரி மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு

## உரம், கிருமிநாசினிகளை தனியார் எடுத்து வரலாம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்ட தனியார் வர்த்தகர்கள் தேவையான அளவுஉரம், மண்ணெண்ணெய் மற்றும் கிருமி நாசினிகளை கொழும்பிலிருந்து எடுத்துவரலாம் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மேற்படி பொருள்களை எடுத்துவருவதற்கு கச்சேரி, கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு வந்தது என்ற கூற்றை மறுத்த அரச அதிபர் மேற்படிவிவசாய பொருள்களை தனியார் தாராளமாக எடுத்துவரலாம் எனவும் இதற்கு எதுவித தடையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவற்றை இறக்குமதி செய்ய விரும்பும் தனியார் வர்த்தகர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் இவற்றை எடுத்துவரத் தேவையான அனுமதியை வழங்க தான் தயாராக இருப்பதாகதெரிவித்தார்

## இலவச சீருடை

இராணுவ நடவடிக்கைகளினால் குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராயசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு இடம் பெயர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலைச் சீருடைகளை வழங்க குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் நானூறு பாடசாலை மாணவர்கள் பயன்பெறவுள்ளனர்.

---

...களை காணாமல் பேவோருக்கும் அறிவித்தல் வேண்டும் என்றார்.

...கவும், ஆடிமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாரிகால படிப்பிற்காகவும் கிடைக்கத்தக்க

## ஹிஸ்புல்லா எம். பிக்கு ஐ.தே.க. பண உதவி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஹிஸ்புல்லா கட்சிக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கு மத்திய மாகாணத்தைச்சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பண உதவி புரிந்திருப்பதாக நம்பகரமாக தெரியவந்துள்ளது

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளே இந்தப் பண உதவியைப் புரிந்ததாகத்தெரிகின்றது.

## தீவக ப.நோ. கூ. சங்கங்கள் நிவாரணம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் தீவக மக்களுக்கு வழங்கப்படும் இலவச உலர் உணவை தீவக பலநோ கூ. சங்கங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

ஏற்கனவே மேற்படி மக்கள் தங்கி உள்ள முகாம் அமைந்துள்ள பகுதிப்பல நோ.கூ.சங்கங்கள் இவர்களுக்கான நிவாரணம் வழங்கும் பணியில் ஈடுபட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில்யாழ். அரசஅதிபர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில்மேற்படி யோசனை சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் இந் நடைமுறையை மேற்கொள்வதாக உறுதி அளித்துள்ளார். (பா)


விற்பனையாகிறது!

**சித்திரம் (ஆண்டு 11)**

க.பொ.த. (சா/த) ேதர்விற்குகந்தது

ஆக்கம்: சி. யசோதரன் (3534)

(ஆசிரியர்: சித்திரம் வினாவிடை)



எமது நிறுவனத்தில்

G. A. Q. Ist in Com

கல்வி கற்ற மாணவர்களுக்கான

**விசேட அறிவித்தல்**

B. A. Part I B. Com. Part I

விரிவுரைகள்

01 - 11 - 1992 காலை 10.00 மணிக்கு

ஆரம்பமாகின்றன

என்பதை அறியத்தருகின்றோம்.

★ ஏனைய மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

நிர்வாகி :

எஸ். அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

(சி-5261)



மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த,

**வீரவேங்கை கதிரவன்**

[தம்பிப்பிள்ளை சசிகுமார்]

வீரமரண நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், இயக்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்வதோடு,

இன்று 28-10-92 புதன்கிழமை நடைபெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலியிலும், அந்தியேட்டிக்கிரியையிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அராலி வீதி, 4-ம் குறுக்கு, -குடும்பத்தினர்

புதிய குடியிருப்பு. (3515)



## நினைவு கூருகின்றோம் 1992-10-28

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் நாவற்குழிப் பகுதியில், இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சர்வா** (கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம் - புளியம் பொக்கணை - கிளிநொச்சி)

கொந்தக்காரன் குளம் பகுதியில், புளொட் தேச விரோதிகளால் தாக்கப்பட்டு வீரச்சாவெய்தி-

**சிவகுமார்** (கதிரவேற்பிள்ளை விஜயரத்தினம் - கொந்தக்காரன் குளம் - வவுனியா)

1990 ஆம் ஆண்டு வந்தாறுமூலைப் பகுதியில், சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் கண்ணன்** (செல்லையா உதயநாதன் - கொம்மாந்துறை - மட்டக்களப்பு)

**சங்கர்** (செல்வரட்ணம் யசோசீலன் தம்பட்டை)

**பிருந்தன்** (சாமிநாதன் சந்திரமோகனராஜ் - செங்கலடி. )

மண்முனைத்துறை வாவியில் படகில் சென்று கொண்டிருக்கும் போது சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழ்ப் பயணிகள்.

யாழ். நகரப்பகுதி மற்றும் கொக்குவில், வட்டுக் கோட்டை, பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட 9 - தமிழர்கள்.

முஸ்லிம்களால் கொலை செய்யப்பட்ட மட்டு- செங்கலடியைச் சேர்ந்த மாணவன் - இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட கொம்மாந்துறை புதிய வீதியைச் சேர்ந்த இளைஞன்.

1991ஆம் ஆண்டு மட்டு- கிரான் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-கிரான் பிரிவுப்பொறுப்பாளர் -

**2-ம் லெப். விஜே** (கந்தையா வடிவேல் - கிரான் - மட்டக்களப்பு)

இதே சம்பவத்தின் போது வீரச்சாவெய்திய நாட்டுப்பற்றாளர்களான-

**தேவராஜா** (கிரான்)

**விஸ்மா** (கிரான்)

மற்றும் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**இளங்கிரன்** (பத்மநாதன் ரஜீவன் தையிட்டி, காங்கேசன் துறை - யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5318)

## சிந்தனைக்கு

சீரான மக்களும், சீரான நாடுகளும், இன்றைய பொழுதில், செயலாற்றி நாளைய பொழுதை நம்பிக்கையுடன் நாடும்.

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 28-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தலையணை மாறுவதால் தலைவலி மாறாது

"விடுதலைப் புலிகள் தாம் விரும்பிய போது விரும்பிய இடத்தில் தாக்குதல் நடத்தும் ஆற்றலில் படைகளின் தலைமை பீடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எந்தவிதமான அழுத்தத்தையும் ஏற்படுத்தவில்லை" இவ்வாறு ஐலன்ட் பத்திரிகையின் இராணுவ விமர்சகர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களவரான இவரின் இவ் விமர்சனம் கூட்டுப்படை தலைமையகம் மீண்டும் பதவி ஏற்ற போதும், புலிகளின் தாக்குதல் திறனைக் குறைக்க முடியவில்லை என்பதை சுட்டிக் காட்டுவதாக உள்ள போதும், இவ்வாறு குறைக்க முடியாமல் போனமை அவர்க்கு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாக உள்ளது போல் தெரிகின்றது.

ஆனால், இது ஒரு ஏமாற்றம் அளிக்கும் விடயமாக மாறியிருப்பதைக் கொண்டு நோக்கும் போது, இவர்களும், இவர்களுக்குத் தகவல்களை வழங்கும் சிங்கள இராணுவ தரப்பினரும் இன்னும் யதார்த்த நிலையைப் புரியாதவர்களாக, புலிகளின் பலம், போர் யுக்திகளின் தன்மை என்பன வற்றை புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே உள்ளது போல் தெரிகின்றது.

கடந்த மார்ச் மாதம் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தில் இருந்து முப்படைத் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் சிங்கள அரசியல், இராணுவ விமர்சகர்கள் இன்னும் சில மாதங்களில் போர் முடிந்து விடும் என்றே கருதினர். 1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்கியதில் பெரும் பங்கு வகித்த தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் இராணுவத்தின் முன் சிலமாதங்களில் பணிய வைத்து விடுவர் என்றேஎண்ணினர்.

ஆனால், நிலைமை எதிர்மறையாகவே இருந்தது. முப்படைத்தளபதிகளின் பொறுப்பில் அதி

# புலிகளுக்கு எதிராகப் போரிடும் மனோதிடம் இராணுவத்திடம் இல்லை

ஒரு எழுச்சிப் போராட்டத்தில் யுத்தத்தின் போக்கைத் தாமதிக்கும் பக்கம் தான் வெல்ல முடிகிறது. புலிகள் ஈழம் யுத்தத்தை வெல்வதற்கு இராணுவத்தை வெற்றி கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் யுத்தத்தை நீடித்தால் போதும் யுத்தம் ஆரம்பித்து இப்பொழுது பத்தாவது ஆண்டு இது இராணுவம் அதன் மனோதிடத்தை இழக்கச் செய்வதோடு, போருக்கு மக்கள் வழங்கிவந்த ஆதரவு பலவீனமடைந்து இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசு நிதி வழங்க முடியாத நிலையை ஏற்படுத்தும். இதனால் இதுவரை அரசு வழங்க மறுத்த சலுகைகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படும்.

மனசைக் கிலேசப்படுத்தும் வகையில் இராணுவத்தின் மனோதிடம் குறைந்து வருவது இன்று தெளிவாகத் தெரிகிறது. சில வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் சேர இளைஞர் வரிசையில் நின்றார்கள். அதனை இப்போது காணமுடிவதில்லை நடப்பு வருடத்தில் 3000 பேரும், சென்ற வருடத்தில் 4000 பேரும் படையை விட்டு ஓடிவிட்டார்கள். இராணுவத்தின் பதவி அமைப்பில் இருந்தாற்போல் குழப்பமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பத்துவருடகாலம்தொடர்ந்து போராடியும் முடிவு எதையும் எட்ட முடியாத காரணத்தால் கனிஷ்ட மற்றும் நடுத்தர இராணுவ அதிகாரிகள் இராணுவததைவிட்டு விலகும் எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள்.

குறித்த நோக்கத்துக்கான இந்த யுத்தத்தின் தன்மை பல இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. தீவிரவாதப் போக்குக்கெதிரான நடைமுறைகள் பற்றிய எண்ணக்கருவைக் கருத்தில் கொள்ளாது நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தத்தை அவசர கோலத்தில் முடிவுக்குக் கொண்டு வர நினைப்பதுவும், பலவீனமான திட்டமும், யுத்தத்தை நடத்தும் உயர்மட்ட வழிகாட்டுதலில் உள்ள குறைபாடுகளும் கடைசியில்அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும்.

ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முன் கூட்டியே ஒழுங்கு செய்ய நேரகாலத்தில் பணம் வழங்கப்படாததால் ஆயுதக் கையிருப்பு ஆபத்தான அளவுக்குக் குறைந்து விடுகிறது.ஆயுதங்களும், உபகரணங்களும் காலம் தாழ்த்தியே கொள்வனவு செய்யப்படுகின்றன.

முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா வகுத்திருந்த இராணுவத்தின் பலத்தை 1,00,000 வரை உயர்த்துவதென்ற திட்டம் கைவிடப் பட்டுள்ளது. இராணுவத்தின் பலத்தை இப்போதுள்ள அளவை விடப்பெருப்பிப்பதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளது மேலதிகப்படைகளுக்குச் சம்பளம் கொடுக்கப் பணமில்லாததும் இதற்கான ஒரு காரணமாகும் இராணுவத்தின் இப்போதைய பலம் அது ஆற்ற வேண்டிய கருமத்தை ஆற்றக்கூடிய நிலையில்உள்ளது என்றாலும் இராணுவம் இப்போது தளர்ச்சியடைந்துள்ளதால் இதனைச் செய்ய முடியாது உள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் 7வது இலகு காலாட்படைப் பிரிவு, 7வது பட்டாலியன் கெமுனுவாச், 8வது சிங்க படைபபிரிவு, 8வது கஜபா படைப்பிரிவு, 7வது விஜயபா றெஜிமெண்ட் காலாட்படை. என்பன அண்மையில் அமைக்கப்பட்ட சில படைப்பிரிவுகளாகும். சிறிலங்கா இராணுவம் தற்போது 25 பட்டாலியன் நிரந்தர படையையும், 12 பட்டாலியன் தொண்டர் படையையும் கொண்டுள்ளது. இருந்த போதும் புலிகளுடனான யுத்தத்தில் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் தாக்குதல் நடத்த அவர்களால் இயலவில்லை. ஆட்பற்றாக்குறை என்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இதனால் கலேவலவில் இயங்கும் தேவகுல பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடிவுறுவதற்கு முன்பாகவே இரண்டு பிளாட்டூன்அளவுபொலிசார் தாக்குதல் நடைபெற்ற மெதிரிகிரிய பகுதிக்கு அனுப்பப்பட்டனர்

இராணுவ வேலிகளை ஊடறுத்து நுழைந்து மிகப்பெரும் சேதத்தை ஏற்படுத்தும் ஆற்றலைப் புலிகள் கொண்டுள்ளனர். முன்னணி பாதுகாப்பு வேலிகளை ஊடறுத்து நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்களில் அண்மையில் கட்டைக்காடு பகுதியில் நடந்த தாக்குதல் குறிப்பிடத்தக்கதாகும். இராணுவ வேலிகள் பலவீனமுடையவையாக வும், வெடிப்புக்கள் கொண்டதாகவும் இருக்கின்றமை இதன் மூலம் புலனாகிறது. வடக்கிலும், கிழக்கிலும் புலிகளின் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க பக்கம் பக்கமாக ஆழமான அரண்கள் அமைத்து இராணுவம் நிலை கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் எப்போதும் பாதுகாப்பு அரண்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பதில்லை தாக்குதல் பலமாக இருந்தால் பாதுகாப்பு அரண்களிலிருந்து பின் வாங்குமாறு தளததிலுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவ பாதுகாப்பு அரண்களைச் சுற்றிக் கண்ணிவெடி விதைக்க அரசிடம் பணம் பற்றாக்குறையாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

இது எப்போதும் பொருந்தக் கூடியதல்ல. ஆனால், பாதுகாப்பு அரண்களில் இருக்கும் இராணுவத்தினர் தாக்குதல் தொடங்கியவுடனேயே பின் வாங்கி விடுவதாக தளத்திலுள்ள கம்பெனி கமாண்டர்கள்முறைப்பாடுகள்செய்கின்றனர். இராணுவத்தினருக்கு தேவையான கண்ணிவெடிகளைப் பெற்றுக்கொடுக்க அரசிடம் போதிய நிதியில்லை. பாதுகாப்பு அரண்கள் தொலைவிலும் தனித்தும் இருக்கின்றன. சுற்றிவர இருக்கும் பற்றைக் காடுகளை அழித்து தெளிவாகப் பார்க்கக்கூடிய வகையிலும், சுடக்கூடிய வகையிலும் அமைப்பதற்கு வேண்டிய முயற்சி மேற்கொள்ளப் படுவதில்லை.

புலிகள் ஊடுருவுவதில் வல்லவர்கள். அவர்கள் தள நிலைமைகளை சாதகமாகப் பயன்படுத்தி ஒரு சில பலவீனமான இடங்களைக் கண்டறிந்து அதனூடாக தமது அணியினரின் எண்ணிக்கையைப் பெருக்கி, சுடும் திறனை அதிகரிப்பதால் வெற்றியைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

கிழக்கில் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதல்கள் மூலம், இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களைச் சமாளிப்பதற்கு வழமையான ரோந்து நடவடிக்கைகளையும் திரளாகச் செல்வதையும் கைவிட்டு மேலதிக முகாம்களை அமைக்க வேண்டியதாயிற்று. மேலும் வீதி துப்புரவாக்கும் வேலையில் ஈடுபடும் போதும், காடுகளில் ரோந்து செல்லும் போதும் புலிகள் மறைந்திருக்கக் கூடும் என்று கருதும் பகுதிகள் மீது மோட்டார் தாக்குதல்கள் நடத்திய படியும், உதவிக்கு உடனடியாகதுருப்புக்கள்விரைந்து வரும் என்பதை உறுதிப் படுத்திய வண்ணமும் தான் செல்லவேண்டியுள்ளது,

''புலிகளுக்கான இலக்குகளை நாமே கொடுக்கிறோம் தொகையான அளவில் செல்வதன் மூலம் தாக்குதல் நடத்துவதற்கு தேவையான நேரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்'' என்று ஒரு அதிகாரி குறிப்பிட்டார்.

கிழக்கில் பெரியளவில் விடுதலைப் புலிகள் சேர்ந்து நடமாடுவது கடினமானதாகையால் ஒருவர் இருவராக வந்து சேர்ந்து ஒரு தாக்குதலை நடத்திய பின்னர் வேகமாகக் கலைந்து சென்று விடுகின்றனர்.

''போர் எப்போதும் மலிவான தொன்றல்ல காசைச் செலவிடாமல் போரில் ஈடுபடவும் முடியாது'' ஆனால் இராணுவ வட்டாரங்களில் சிலரிடையே அரசாங்கம் இராணுவத்திற்கு போதிய நிதியை ஒதுக்காமல் தமாஷாக்களில் வீண்செலவு செய்வதாக அபிப்பிராயம் நிலவுகின்றது இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு போதாமையால் இராணுவத்தில் எண்ணிக்கையைப் பெருக்கவோ தேவையான ஆயுத தளபாட வகைகளைப் பெற்றுக் கொள்ளவோ முடியாமல் இருக்கின்றது.

போரிடும் தளபதிகள் மட்டத்தில் இராணுவ உயர் கட்டளை பீடத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் மகிழ்ச்சிக்குரியனவாக இல்லை. போருக்கான அர்ப்பணிப்பு என்பதை விடவும் திறமைகளையும், யுக்திகளையும் தமது சொந்த நலன்களுக்கு பயன்படுத்துவதாலும் உத்தியோக பூர்வ விஜயங்கள் என்ற போர்வையில் தமது சொந்த வியாபாரங்களை கவனிப்பதிலும் சிலர் ஆர்வம் காட்டுவதாக சொல்லப்படுகிறது. ஒழுங்கான திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள் வழங்கப் படாமை நியமனங்களில் வெளியார் தலையீடுஎன்பனபோன்றவையும் தளத்திலுள்ள அதிகாரிகள் மனக்கசப்படையும் பிற விடயங்கள் ஆகும்.

பாதுகாப்பு படைகளில் ஒரு சாரார் யுத்தத்தின் போக்கு பற்றிய மீள்பரிசீலனை அவசியம் தேவைப்படுவதாக உணரத் தலைப்பட்டுள்ளனர் போரைப் பற்றிய மதிப்பீட்டில் வெற்றி தோல்விகள் மற்றும் பற்றாக்குறைகள் தேவைகள் என்பன ஆராயப் படவேண்டும் என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

> ''போர் எப்போதும் மலிவானது அல்ல'' என்ற தலைப்பில் ஐலன்ட் வார இதழின் பத்தி எழுத்தாளர் றோகான் குணசேகரா 25-10-1992 வார இதழில் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியின் மொழியாக்கம் இது.

## பாகிஸ்தான் சொந்தமாக

## இந்திய - காஷ்மீர் போர் 45 ஆவது ஆண்டு நிறைவு

(பாகிஸ்தான்)

அரங்கில் ஒப்புக் கொள்ளப்

வழங்கும் சிங்கள இராணுவ தரப்பினரும் இன்னும் யதார்த்த நிலையைப் புரியாதவர்களாக, புலிகளின் பலம், போர் யுக்திகளின் தன்மை என்பனவற்றை புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே உள்ளது போல் தெரிகின்றது.

கடந்த மார்ச் மாதம் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்து முப்படைத் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் சிங்கள அரசியல், இராணுவ விமர்சகர்கள் இன்னும் சில மாதங்களில் போர் முடிந்து விடும் என்றே கருதினர். 1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்கியதில் பெரும் பங்கு வகித்த தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும். இராணுவத்தின்முன் சிலமாதங்களில் பணிய வைத்து விடுவர் என்றேஎண்ணினர்.

ஆனால், நிலைமை எதிர்மறையாகவே இருந்தது. முப்படைத்தளபதிகளின் பொறுப்பில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டபின் இராணுவத்தினரின் இழப்பு முன்னரைவிட அதிகமாகியது. அத்தோடு இராணுவத்தினரின் ஒழுங்குக் கட்டுப்பாடு குறைந்தது. இராணுவத்தினர் போரிட முடியாத அளவிற்கு மனத்தளர்ச்சியும் அடைந்தனர். அந்தளவிற்கு புலிகளின் தாக்குதல் உக்கிரமானதாக இருந்தது. கடந்த ஆறுமாதத்தில் ஏற்பட்ட இழப்புகள் மிகவும் உயர்வானவை என்பதை இராணுவமே ஏற்றுக் கொள்ள வேண்டிவந்தது

ஆனால், இந்நிலை உருவாவதற்கு சிங்கள இராணுவத்தின் திறமைக் குறைவு என்பதை விட விடுதலைப் புலிகளிடம் இருந்த மனத்திடமும், திறமையுமே காரணமாகும். இந் நிலையில், சிங்கள இராணுவத்தின் தலைமை யாரிடம் இருந்தாலென்ன, அமைப்பு எவ்வாறு மாறினாலென்ன புலிகளின் திறமைக்கும், போர் யுத்திகளுக்கும் அர்ப்பணிப்பிற்கும் எதிராகப் போரிடுவது இயலக்கூடியதொன்றல்ல.

விடுதலைப் புலிகள் கடந்த பத்து வருடகாலமாக நடத்தி வரும் தீவிர ஆயுதப் போராட்டத்தினால் சிறிலங்கா இராணுவத்தினரைப் பற்றியும் அவற்றின் தளபதிகள் பற்றியும் நன்கு அறிவர். அத்தோடு, இத்தளபதிகள் அனைவரும் கூட்டாகவும் தனியாகவும் நடத்திய பல சமர்களை எதிர்த்துப் புலிகள் வெற்றிகரமாகப் போரிட்டும் உள்ளனர். இந்நிலையில் தளபதிகளை மாற்றுவதென்பது தலைவலிக்காகத் தலையணையை மாற்றுவது போன்றதாகும்.

இந் நிலையில் சிறிலங்கா இராணுவ பீடத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதினாலோ, அமைப்பை மாற்றுவதினாலோ புலிகளை வென்றுவிடலாம் என சிங்கள அரசாங்க தரப்பினரும், பேரினவாதிகளும் எண்ணுவார்களேயானால் அது அவர்களுக்கு ஏமாற்றமான ஒன்றாகவே இருக்கும். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் அதிகாரத்தை மாற்றுவதால் புலிகளை வெல்ல முடியும் என இன்று கருதியவர்கள், அன்று அதிகாரம் இருந்த போது ஏன் இப்போரை ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவால் வெல்ல முடியவில்லை என்ற கேள்வியை எழுப்புவார்களேயானால், இது தம்மால் வெல்ல முடியாத போர் என இலகுவில் விளங்கிக் கொண்டிருக்க முடியும், இன்று அங்கலாய்க்க வேண்டி வந்திராது.

போராடியும் முடிவு எதையும் எட்ட முடியாத காரணத்தால் கனிஷ்ட மற்றும் நடுத்தர இராணுவ அதிகாரிகள் இராணுவத்தைவிட்டு விலகும் எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள்.

குறித்த நோக்கத்துக்கான இந்த யுத்தத்தின் தன்மை பல இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. தீவிரவாதப் போக்குக்கெதிரான நடைமுறைகள் பற்றிய எண்ணக்கருவைக் கருத்தில் கொள்ளாது நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தத்தை அவசர கோலத்தில் முடிவுக்குக் கொண்டு வர நினைப்பதுவும், பலவீனமான திட்டமும், யுத்

படைப்பிரிவு, 7வது விஜயபா றெஜிமென்ட் காலாட்படை, என்பன அண்மையில் அமைக்கப்பட்ட சில படைப்பிரிவுகளாகும். சிறிலங்கா இராணுவம் தற்போது 25 பட்டாலியன் நிரந்தர படையையும், 12 பட்டாலியன் தொண்டர் படையையும் கொண்டுள்ளது. இருந்த போதும் புலிகளுடனான யுத்தத்தில் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் தாக்குதல் நடத்த அவர்களால் இயலவில்லை. ஆட்பற்றாக்குறை என்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இதனால் கலேவலவில் இயங்கும் தேவகுல பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடிவு

பாதுகாப்பு அரண்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பதில்லை தாக்குதல் பலமாக இருந்தால் பாதுகாப்பு அரண்களிலிருந்து பின் வாங்குமாறு தளத்திலுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவ பாதுகாப்பு அரண்களைச் சுற்றிக் கண்ணிவெடி விதைக்க அரசிடம் பணம் பற்றாக்குறையாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

இது எப்போதும் பொருந்தக் கூடியதல்ல. ஆனால், பாதுகாப்பு அரண்களில் இருக்கும் இராணுவத்தினர் தாக்குதல் தொடங்கியவுடனேயே பின்

கருதும் பகுதிகள் மீது மோட்டார் தாக்குதல்கள் நடத்திய படியும், உதவிக்கு உடனடியாக துருப்புக்கள் விரைந்து வரும் என்பதை உறுதிப் படுத்திய வண்ணமும் தான் செல்லவேண்டியுள்ளது,

''புலிகளுக்கான இலக்குகளை நாமே கொடுக்கிறோம் தொகையான அளவில் செல்வதன் மூலம் தாக்குதல் நடத்துவதற்கு தேவையான நேரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்'' என்று ஒரு அதிகாரி குறிப்பிட்டார்.

கிழக்கில் பெரியளவில் விடுதலைப் புலிகள் சேர்ந்து நட

படாமை நியமனங்களில் வெளியார் தலையீடுஎன்பனபோன்றவையும் தளத்திலுள்ள அதிகாரிகள் மனக்கசப்படையும் பிற விடயங்கள் ஆகும்.

பாதுகாப்பு படைகளில் ஒரு சாரார் யுத்தத்தின் போக்கு பற்றிய மீள்பரிசீலனை அவசியம் தேவைப்படுவதாக உணரத் தலைப்பட்டுள்ளனர் போரைப் பற்றிய மதிப்பீட்டில் வெற்றி தோல்விகள் மற்றும் பற்றாக்குறைகள் தேவைகள் என்பன ஆராயப்பட வேண்டும் என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

# பாகிஸ்தான் சொந்தமாக அணு உலை அமைக்கும்?

(இஸ்லாமாபாத்)

அணு உலைகளை அமைப்பதற்கான உதவிகள், சர்வதேச மட்டத்தில் பாகிஸ்தானுக்கு கிடைக்காது போனால் இதற்கான கட்டுப்பாடுகள் சர்வதேச மட்டத்தில் தளர்த்தப்படாது போனால், பாகிஸ்தான் சொந்த அணு உலை ஒன்றை அமைக்க முன்வருமென பாகிஸ்தான் அணு சக்தி ஆணைக்குழுத் தலைவர் இஷ்பாக் அஹமட் தெரிவித்தார்

இதேவேளை அணு உலைகளை அமைத்து அவற்றின் மூலம் பயன்பெறும் வாய்ப்பு தமக்கு இருக்கிறதா என்பது பற்றி எதுவித கருத்தும் அவர் தெரிவிக்கவில்லை.

அடுத்த சில ஆண்டுகளில் சீனாவிடமிருந்து அணு உலை ஒன்றை பாகிஸ்தான் வாங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

1990ஆம்ஆண்டுஅமெரிக்கா பாகிஸ்தானுக்கான சகல இராணுவ பொருளாதார உதவிகளையும் நிறுத்திக் கொண்டதன் பின்னால் அணுகுண்டு தயாரிப்பில் பாகிஸ்தானின் நிலை பற்றி காங்கிரஸினால் உறுதியாக கூறமுடியாத நிலையினால் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு பாகிஸ்தான் சார்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

உலகில் 15 முதல் 20 நாடுகள் தம் அணுசக்தி தேவைகளை சுயமாகவே பூர்த்தி செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## வங்காளவிரிகுடாவில் புயல்; பங்களாதேஷ் மீனவர் பலி

பங்களாதேஷ் மீனவர்கள் 51 பேர் நீரில்மூழ்கி இறந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் வீசிய கடும்புயலில் சிக்கியஇரு படகுகள் நீரில் மூழ்கியதாக அறிவிக்கப்படுகிறது. படகுகள் இரண்டிலும் 160 பேர் இருந்தனர் என்றும் போலா நகருக்கும் அண்மைத் தீவுகளுக்குச் செல்லும் பயணிகள் இந்தப் படகுகளில் இருந்ததாக அறிவிக்கப்படுகிறது. 109 பேர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

## பசுபிக் சூறாவளியில் சிக்கி தென்கொரிய கப்பல் மறைவு

(சியோல்)

பசுபிக் சமுத்திரத்தில்உள்ள அமெரிக்கத் தீவான குவாமின் கரையோரமாக வீசிய கடுமையான சூறாவளியில் தென்கொரிய சரக்குக் கப்பலொன்று 28 சிப்பந்திகளுடன் காணாமல் போய்விட்டதாகக் கப்பல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

64,956 தொன் எடையுடைய 'டியாஸ் ஹோனி' என்ற இக்கப்பலில் இருந்து கடந் வியாழக்கிழமை ஆபத்துச் சமிக்ஞை கிடைத்தது அதன்பிறகு எதையும் அறிய முடியவில்லை என சியோலில் உள்ள 'பான் ஒவன்' சிப்பிங் கம்பனிலிமிடடின். பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இந்தியாவும்சீனாவும் பீகிங்கில் பேச்சு

(டில்லி)

இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையேயான எல்லைப் பேச்சுக்களின் ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் பீகிங்கில் நடைபெற்றது

இந்திய வெளியுறவுச் செயலர் தலைமையிலான தூதுக் குழுவுடன் சீன வெளியுறவுச் செயலர் தலைமையிலான தூதுக்குழு பேச்சுக்களை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச அரசியல் நிலை என்பன உட்பட பல் வேறு விடயங்கள் இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

2116 ஆம் ஆண்டில்

## பூமியுடன் வால்வெள்ளி மோதுமென தெரிவிப்பு

(சிட்னி)

2116-ம் ஆண்டு ஆகஸ்ட் 14-ம் திகதியன்று பாரிய வால் வெள்ளியொன்று பூமியுடன் மோதும் என்றும், இதனால் பத்து இலட்சத்துக்கும் அதிகமான அணுகுண்டுகள் வெடித்தது போன்ற பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிட்னியில் நடைபெறும் விண்வெளி ஆராய்ச்சிக்கான கருத்தரங்கில் இத்தகவல் வெளியிடப்பட்டது. அதில் மேலும் இந்த வால் வெள்ளித் தாக்கத்தினால் உலகின் பெரும்பாலான உயிரினங்கள் அழிந்து விடும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய - காஷ்மீர் போர் 45 ஆவது ஆண்டு நிறைவு

(பாகிஸ்தான்)

இந்திய பாதுகாப்பு படையினர் காஷ்மீர்பகுதியை ஆக்கிரமித்த 45வது ஆண்டு நாள் நேற்றாகும். இதனைக்குறிக்குமுகமாக பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் கீழ்சபை ''தேசிய எசம்பலி'' ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.

இந்திய எல்லையில் வாழும் காஷ்மீர் மக்கள் மிகத் துன்பத்தில் வாழுவதாகவும், உலக அரங்கில் ஒப்புக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளை மீறி இந்திய இராணுவம் கொடுமைகளை செய்வதாகவும், இந்திய இராணுவம் சிறை பிடித்தல், சித்திரவதை செய்தல், பாலியல் வன்முறை போன்ற மனிதநேயங்கள் இல்லாத விடயங்களில் ஈடுபடுவதாகவும், காஷ்மீர் பிரச்சினை கண்டறிய ஒரு ஐ.நா. குழு செல்ல வேண்டும் என ஐ.நா. காரிய தரசியிடம் வேண்டப்பட்டுள்ளது.

## தேர்தல் நடத்தக் கோரி பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

(லாகூர்)

பாகிஸ்தான் அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டுமெனக் கோரி ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றைநடத்தினர் என்றும் இவர்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து பொலிசார் அனைவரையும் கலைத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியினர் ஒழுங்கு செய்த ஊர்வலத்தில் சுமார் 4000 பேர் கலந்து கொண்டனர். எதிர்க்கட்சி மக்கள் ஜனநாயகக் கூட்டணி இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து புதிதாக தேர்தல் நடத்த வேண்டுமென மக்கள் வலியுறுத்தினர்.

## எல்லை தாண்டும் முயற்சி கைவிடப்பட்டது

பாகிஸ்தானிலுள்ள காஷ்மீர் தீவிரவாதிகள் முட்கம்பிகளூடாக எல்லையை கடக்க முயலுகையில் பாகிஸ்தான் இராணுவத்தால் சுடப்பட்டு ஒருவர் மரணம் அடைந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இந்திய எல்லையை கடக்க முயன்ற இருவர் சுடப்பட்டு மரணம் அடைந்தனர் என்று வேறொரு செய்தி தெரிவிக்கிறது. மேலும் இவர்களின் எல்லையை தாண்டும் முயற்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சுக்களில் முட்டுக்கட்டை இஸ்ரேலே காரணம்

### யாசிர் அரபாத் கண்டனம்

மேற்காசிய சமாதானப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை நிலை தோன்றியிருப்பதற்கு இஸ்ரேலே காரணம் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் குற்றம் சாட்டியுள்ளார்.

இத் தேக்க நிலையைப் போக்குவதற்கு முயற்சி எடுக்கும்படி மேற்கு நாட்டுத் தலைவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஈழநாதம்

# இலங்கை உள்நாட்டு போருக்கு உடன் முடிவு காணவேண்டும்

## களனி விகாரையில் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டைப் பிளவு படுத்துவதற்காகத் தமிழ்த் தீவிரவாதிகள் நடாத்திவரும் உள்நாட்டு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது உட்பட பதினைந்து முக்கிய தீர்மானங்கள் களனி சிறிட்ஞானந்தர்மைய விகாரையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மக்கள் சக்தியை ஒன்றிணைப்பதற்கும் நாட்டின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதற்கும் இவற்றை பொதுமக்கள் அறிந்து கொள்ளுமுகமாகவுமே இத்தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டதாக இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய கலாநிதி தரம்பிபொல ரத்னசார தேரோ தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்; தேசிய வன அழிப்பு, தேசிய சொத்துக்களை கொள்ளையிடுதல் போன்றவற்றிற்கு அரசியல் தலையீடுகள் அற்ற பொலிஸ் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும். இங்கு அரசியல் வாதிகளின் செயல்பாடுகள் செல்வாக்குகள், தலையீடுகள் சட்டத்துறையில் உட்புகாது இருக்க வேண்டும்.

இங்கு இராணுவம் மற்றும் பொலிசார் தவிர வேறுஎவரும் ஆயுதங்கள் வைத்திருக்கத் தடைவிதிக்க வேண்டும். வெளிநாட்டுப் பாடசாலைகளினால் எமது கல்விக்கு அச்சுறுத்தல் உள்ளது. அதை அரசு உடன் நிறுத்த வேண்டும். மரணமடைந்த கொப்பேகடுவவின் மூன்றாம் மாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி வருவதால் அன்றைய தினம் நாடு முழுவதும் சமயஅனுஷ்டானங்களையும் தர்மங்களையும் வழங்கி அவரை ஒரு தேசிய வீரனாக கௌரவிக்க வேண்டும் என்றார்.

### வெளிவாரி

உரிமை வழங்கக் கூடாது, பல்கலைக்கழக பொது அறையில் இடம் கொடுக்கக்கூடாது என்று மேற்படி மாணவர் ஒன்றியம் கூறுகிறது. மேலும் வெளிவாரியாக அதிகளவு மாணவர்கள் கல்வி பயின்று அதிகளவு பட்டதாரிகள் உருவாக்கப்பட்டால் வேலை வாய்ப்பில் உள்வாரிப்பட்டதாரிகளுடன் வெளிவாரிப்பட்டதாரிகள் போட்டியிடுவார்கள். இது உள்வாரிப்பட்டதாரிகளது உரிமைகளைப் பாதிக்கும் என்று மேற்படி மாணவர் ஒன்றியம் அஞ்சுகிறது,

### தவறான விளக்கமே

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆண்டு 6

## அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1993

01. இப்பரீட்சை 15- 11- 1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
02. தற்போது ஆண்டு 5இல் கல்விகற்கும் 01-02-1982க்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 30/- செலுத்தி 30- 10- 92 வெள்ளிக்கிழமை தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இக் கல்லூரியில் நேரில் 06- 11- 92 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக்கையளிக்கப்படல்வேண்டும்.(06-11-92க்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)
05. இக் கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில்11.11 92 புதன்கிழமை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

---

# மர நடுகை வாரமாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்).

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இவ்வாரத்தை மரநடுகை வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன்படி கடந்த 26-ம்திகதி முதல் கார்த்திகை முதலாம் திகதி வரையான காலப் பகுதிகளில் தமிழீழ மக்கள் அனைவரையும் மரங்களை நடுகை செய்வதிலும் அவற்றுக்கான பராமரிப்புக் கூடுகளை அமைப்பதிலும் ஈடுபட வைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்து செயற்படுமாறு மேற்படி கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது

இவ்வாரம் தினமும் காலை 8-11மணிவரை இம் மரநடுகை நடவடிக்கைகளில் பொது மக்களை ஈடுபடுமாறும் தேவையான மரக்கன்றுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், நடுவப் பணியக யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, கோட்ட வட்டச் செயலகங்களிலும் உதவி அரச அதிபர் பணிமனைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மேற்படி கழகம் தெரிவித்துள்ளது.

### நவம்பரில்

தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு செல்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் அவ் அதிகாரி 'லங்காதீப'வுக்குதெரிவித்துள்ளார்.

### கிரனைட்

ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் பற்றி தெரியவருவதாவது, கடந்த 25ஆம் திகதி மாலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவர் களுவாஞ்சிக்குடிப் பகுதிக்கு சென்று கொண்டிருந்தபோதுதிடீரென விசேட அதிரடிப் படையினர் எதிர்ப்பட்டனர். இவர்களைக் கண்ட ஆதரவாளர் இவர்கள் மீது இரண்டு குண்டுகளை வீசியுள்ளார். அதிரடிப்படையினருக்கு மிக அண்மையில் இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை இத்தாக்குதலினால் ஒரு படை கொல்லப்பட்டதாகவும், மற்றொருவர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

### மீனவர்கள்

நீண்ட காலமாக பாதுகாப்பில் இருந்துவந்த இவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டதையடுத்து செஞ்சிலுவைச் சங்கம் இவர்களை குமண கப்பல் மூலம் காங்கேசன்துறையூடாக பலாலிக்கு அழைத்துச் சென்றதுஅங்கிருந்துவிமானம் மூலம் திருக்கோணமலையை சென்றடைவர்.(82)

### வயிற்றோட்டம்; குழந்தைபலி

வேகமாகப்பரவிவரும் வயிற்றோட்ட நோய்க்கு தென்மராட்சியில் குழந்தை ஒன்று பலியாகியது சாவகச்சேரி பிரதான வீதியைச் சேர்ந்த அருளேந்தி அஜந்தி (வயது2) என்ற குழந்தையே இவ்வாறு பலியானவராவார்

### தோல்விகளுக்குப்

அப்படியாயின் இவர்கள் இருவரும் நாட்டின் நன்மை கருதி உடனடியாகப் பதவி விலகித் திறமைசாலிகளுக்கும், இன்றைய அவசரமான சூழ்நிலைக்கு, நிச்சயமாகத் தம்மை அர்ப்பணிப்பவர்களுக்கும் வழிஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று ஐலன்ட் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது

அப்படி அவர்கள் பதவியிலிருந்து விலகி மற்றவர்களுக்கு இடமளிக்கத் தவறுமிடத்து, நாடு அழிவை நோக்கிச் செல்லும் முன் முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி தலையிட்டு, அவர்களைப் பதவியிலிருந்து விலக்குவது ஜனாதிபதியின் கடமைப் பாடாகும், இவ்வாறு ஐலன்ட் மேலும் தெரிவித்துள்ளது,

### கோட்ட

சீரானவினாக்களை தயாரித்து இவ் வினா வங்கிக்கு தரமான வினாக்களை உருவாக்கமுடியும்.

முதற்கட்டமாக 1992-ல் ஆண்டு 9,10,11-ம் வகுப்புக்களுக்கு கணிதம், விஞ்ஞானம், முதல்மொழி, சர்வதேசமொழி சமூகக்கல்வி, சமயபாடங்களில் முழுப்பாடப் பரப்பிலும் தரமான வினாக்களை தயாரித்து அவை மூலம் வினா வங்கி அமைக்கப் பயன்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கோட்டரீதியாக ஆரம்பத்தில் அமைக்கப்படும் வினாவங்கிகள் பின்னர் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், மாவட்ட மட்டங்களில் நடைபெறும் அடைவுப் பரீட்சைகட்கு ஒவ்வொரு பாடத்திற்கும் தரமான வினாக்களைக் கொண்ட

---

# நில அளவையாளர்கள் கருத்தரங்கு

நில அளவையாளர்கள் மற்றும் நில படம் வரைவோருக்கான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ காவல்துறை பணிமனைகளில் நடைபெறவுள்ளன.

தனிப்பட்டோரின் காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு நிலஅளவையை மேற்கொள்ள விரும்பும் அனுமதிப் பத்திரம் பெற்ற, அனுமதிப் பத்திரம் பெறாத, பயிற்சி பெற்ற சகல நில அளவையாளர்களும், நில வரைபடம் வரைய விரும்பும் பயிற்சி பெற்ற சகல வரைபட வரைஞர்களும் இக் கலந்துரையாடல்கலந்து கொள்ளலாம்

மேற்படி கலந்துரையாடல் 29ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணத்திலும் மாலை 3 00 மணிக்கு சங்கானையிலும்30 ஆம்திகதி காலை 9. 00 மணிக்கு சுன்னாகத்திலும் மாலை 3. 00 மணிக்கு கோப்பாயிலும் 31ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வல்வெட்டித்துறையிலும் மாலை 3.00 மணிக்கு பருத்தித்துறையிலும் நவம்பர் முதலாம்திகதி காலை 9 00 மணிக்கு சாவகச்சேரியிலும் மாலை 3 00 மணிக்கு பளையிலும் அமைந்துள்ளகாவல்துறை பணிமனைகளில் நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வோர் தமக்கு அண்மையிலுள்ள காவல் பணிமனைகளில் மேற் குறிப்பிட்ட தினத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம் எனவும் நில அளவை, வரைபடத்தொழில் வாய்ப்பினைப் பெறும் போது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வோருக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அறிவித்துள்ளார்.

---

## காணவில்லை

மாவை சொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த சிவஸ்ரீ இ சிதம்பரநாதக் குருக்களை அளவெட்டியில் 26 - 10 - 92 பிற்பகலிலிருந்து காணவில்லை 40 வயதுடையவர் கறுப்பு நிறம், உள்வளையல் சைவக் குருக்கள் என்பதால் பூணூல் இல்லை. இவர் மனநோயாளி கண்டவர் தகவல் தரவும்.

| | |
|---|---|
| ஸ்ரீ மாவை விநாயகர் | சு, சிவஷண்முகானந்தக்குருக்கள் |
| சோதிட நிலையம் | ஸ்ரீ வீரமாகாளி கோயில் |
| ஸ்ரீகைலாச பிள்ளையார் | மேற்கு வீதி, |
| கோயில் சந்தி, | யாழ்ப்பாணம் |
| நல்லூர். | [3539] |

---

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து இலக்மணேஸ்வரன் (பவா)

(அம்பனை முருகன் கமக்களஞ்சிய உரிமையாளர்)

பன்னாலையைச் சேர்ந்த வைரமுத்து - இலக்மணேஸ்வரன் 23-10-1992 இல் கொழும்பில் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கா. வைரமுத்து - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், செகதீஸ்வரியம்மாள் (இளைப்பாறிய ஆசிரியை), கனகசபாபதி (வ. பி. போ. ச. கோண்டாவில்), அகிலாண்டநாயகி, இராஜேஸ்வரி (இறைவரித் திணைக்களம்), கமலாம்பிகை, யோகேஸ்வரன் (முருகன் கமக்களஞ்சியம்), லோகநாயகி (கணக்குப் பதிவாளர்), விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளையதம்பி (சர்வோதயம்), பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ஏரம்பமூர்த்தி, கதிர்காமத்தம்பி (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) சிவனேஸ்வரன்

01. இப்பரீட்சை 15- 11- 1992 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

02. தற்போது ஆண்டு 5இல் கல்விகற்கும் 01-02-1982க்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.

03. பிரவேசப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 30/- செலுத்தி 30- 10- 92 வெள்ளிக்கிழமை தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இக் கல்லூரியில் நேரில் 06- 11- 92 வெள்ளிக்கிழமைசகு முன்னதாகக்கையளிக்கப்படல்வேண்டும்.(06-11-92க்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)

05. இக் கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில்11.11 92 புதன்கிழமை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1992 10. 27

அ.பஞ்சலிங்கம்
அதிபர்

(சி-5320)

## 5ஆம்ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
10 — 10 — 1965



தாயக மண்ணில்
27 — 10 — 1987

### வீரவேங்கை (கணேஸ்)
(பொன்னு தர்மலிங்கம்)

சுதந்திரத்தின் விடிவு தேடி
சுயநலத்தை மறந்தவனே
எண்பத்தி மூன்றாம் ஆண்டதனில்
எதிரிபடை எதிர்க்கப் புலியானாய்
உதயமானாய் முதல் மலராய் செல்வபுரத்தில்
உதித்தார்கள் பல வேங்கைகள் உன் வழியில்
இந்தியனின் ஆதிக்க போர் முனையில்—நீ
இறுதியுடன் இறுமாப்புடன் போராடி
வீரமுடன் வீரச்சாவை அடைந்தவனே
விடுதலைப் புலிகளின் விடிவெள்ளியில்
ஒன்றானாயோ?
தமிழீழ தாகமுள்ள எவ்வுயிரும்
தரணியிலே உன்னை மறவாதையா?
தளர்கின்றோம் உன் பிரிவால்
தவிக்கின்றோம் தமிழ் ஈழத்திற்காக

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

உரும்பராய் தெற்கு,
செல்வபுரம்,
உரும்பராய்.

(சி/5322)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

யும் தர்மங்களையும் வழங்கி அவரை ஒரு தேசிய வீரனாக கௌரவிக்க வேண்டும் என்றார்.

### வெளிவாரி

உரிமை வழங்கக் கூடாது, பல்கலைக்கழக பொது அறையில் இடம் கொடுக்கக்கூடாது என்று மேற்படி மாணவர் ஒன்றியம் கூறுகிறது. மேலும் வெளிவாரியாக அதிகளவு மாணவர்கள் கல்வி பயின்று அதிகளவு பட்டதாரிகள் உருவாக்கப்பட்டால் வேலை வாய்ப்பில் உள்வாரிப்பட்டதாரிகளுடன் வெளிவாரிப்பட்டதாரிகள் போட்டியிடுவார்கள். இது உள்வாரிப்பட்டதாரிகளது உரிமைகளைப் பாதிக்கும் என்று மேற்படி மாணவர் ஒன்றியம் அஞ்சுகிறது.

### தவறான விளக்கமே எதிர்ப்புக்கு காரணம்

வெளிவாரிக் கற்கைநெறி தொடர்பாக உள்வாரி மாணவர்கள் தவறாக விளங்கிக் கொண்டதாலேயே இந்த எதிர்ப்பியக்கம் உருவாகியுள்ளது. என்று கலைப்பீடாதிபதியும் வெளிவாரிப் பட்டப் படிப்பு பிரிவு இணைப்பாளருமான பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் உள்வாரி மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இப்பல்கலைக்கழகத்துச்கு வழங்கப்பட்டுவரும் வழங்கள் எதுவும் வெளிவாரி மாணவர்களது கற்கைநெறிக்காக இதுவரை பயன்படுத்தப்படவில்லை. வெளிவாரி மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட பணத்தைப் பயன்படுத்தியே அவர்களுக்குப் பரீட்சை நடாத்தப்படுகிறது, மற்றும் பதிவுப் புத்தகம் வழங்கப்படுகிறது. இம்மாணவர்களுக்கு அடையாள அட்டைகள் எதுவும் வழங்கப்படவில்லை. பல்கலைக்கழக நூலக வசதியும் வழங்கப்படவில்லை என்றும்

கண்ட ஆதரவாளர் இவர்கள் மீது இரண்டு குண்டுகளை வீசியுள்ளார். அதிரடிப்படையினருக்கு மிக அண்மையில் இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை இத்தாக்குதலினால் ஒரு படை கொல்லப்பட்டதாகவும், மற்றொருவர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

### மீனவர்கள்

நீண்டகாலமாக பாதுகாப்பில் இருந்துவந்த இவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டதை யடுத்து செஞ்சிலுவைச் சங்கம் இவர்களை குமண கப்பல் மூலம் காங்கேசன் துறையூடாக பலாலிக்கு அழைத்துச் சென்றதுஅங்கிருந்துவிமானம் மூலம் திருக்கோணமலையை சென்றடைவர்.(82)

அவர் தெரிவித்தார்.

### அஞ்ச வேண்டியதில்லை

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அதிகளவு பட்டதாரிகள் உருவாக்கப்பட வேண்டும் வேலைவாய்ப்பில் போட்டி ஏற்படும் என்பதற்காக எவரும் அஞ்சவேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே பல்வேறு இடங்களில் சுவரொட்டிகளும், சில வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன கலைப்பீடாதிபதியின் அலுவலகசுவர்களிலும் கதவிலும் கலைப்பீடாதிபதியா? வெளிவாரிப்பீடாதிபதியா? என்றும் 4 A = 3 S +IF என்றும் எழுதப்பட்டிருந்தது. இதன் ஒரு பகுதி பின்னர் மை பூசி அழிக்கப்பட்டிருந்தது. வெளிவாரியை வெளியேற்று'' ''வெளிவாரிக்கு உள்ளே என்ன வேலை'' ''வெளிவாரியை உள்ளே நடமாடவிடோம்'' பாடசாலையா? பள்ளிக்கூடமா? ஆகிய பல வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. (க) (பா) (5)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மாதனை சனசமூக நிலையத்தால் 25-10-92 இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் இலக்கங்கள்.

1-ம் பரிசு - 649
2-ம் பரிசு - 273
3-ம் பரிசு - 540

ஆறுதல் பரிசு

1) 814 2) 374
3) 66 4) 36
5) 399

பரிசுப் பொருள்களை ஐந்து நாட்களில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொளகின்றோம்.

(3217)

இப்படிக்கு
நிர்வாகத்தினர்.

கோட்ட

சீரானவினாக்களை தயாரித்து இவ் வினா வங்கிக்கு தரமான வினாக்களை உருவாக்கமுடியும்.

முதற்கட்டமாக 1992-ல் ஆண்டு 9,10,11-ம் வகுப்புக்களுக்கு கணிதம், விஞ்ஞானம், முதல்மொழி,சர்வதேசமொழி சமூகக்கல்வி,சமயபாடங்களில் முழுப்பாடப் பரப்பிலும் தரமான வினாக்களை தயாரித்து அவை மூலம் வினா வங்கி அமைக்கப் பயன்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கோட்டரீதியாக ஆரம்பத்தில் அமைக்கப்படும் வினாவங்கிகள் பின்னர் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், மாவட்ட மட்டங்களில் நடைபெறும் அடைவுப் பரீட்சைகட்கு ஒவ்வொரு பாடத்திற்கும் தரமான வினாக்களைக் கொண்ட வினாத்தாள்களை குறுகிய நேரத்தில் தயாரிப்பதற்கு உதவியாக பயன் படவாய்ப்பாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஹெரோயின்

தப்பட்ட போதே 300 கிராம் ஹெரோயின் பொலித்தீன் கடதாசியில் சுற்றப்பட்டு விழுங்கி இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

### மட்டக்களப்பு

37 ஆம் கிராமத்தைச் சேர்ந்தவர்களான ஏழு பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணபிள்ளை பஞ்சாட்சரம் [வயது 40], மூன்று பிள்ளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி அண்ணைகேசரி [வயது 30], குடும்பஸ்தரான தாமோதரம் பாஸ்கரன், இரண்டு பிள்ளைகளின் தந்தையான கண்டுமணி (வயது70) ஆகியோரும் வெல்லாவெளியைச்சேர்ந்த பாலிப்போடி தில்லையோகன்(வயது 17) ஆகிய ஆறு பேருமே கொல்லப்பட்டவர்களாவர்.

### தமிழ்

வதை செய்த இச்சிறிலங்கா படையினர் தமிழ் மக்களை எவ்வாறு வேட்டையாடுகின்றனர் என்பதை நாம் இங்கு தெரிந்துகொண்டோம்.

நாங்கள் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டது முதல் இன்றுவரை அவர்களால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டோம். அவர்கள் எமக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து தந்து நல்லமுறையில் கவனித்தார்கள். இதற்காக நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நாம் இன்று விடுதலை செய்யப்படுவதை எண்ணி மிகவும்மகிழ்ச்சியடைகிறோம் எமது விடுதலையையிட்டு எங்கள் உறவினர்களும் மகிழ்ச்சியடைவர் எனக் கூறினர். (பா)

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து இலக்மணேஸ்வரன் (பவா)
(அம்பனை முருகன் கமக்களஞ்சிய உரிமையாளர்)

பன்னாலையைச் சேர்ந்த வைரமுத்து - இலக்மணேஸ்வரன் 23-10-1992 இல் கொழும்பில் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கா. வைரமுத்து - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், செகதீஸ்வரியம்மாள் (இளைப்பாறிய ஆசிரியை), கனகசபாபதி (வ. பி. போ. ச. கோண்டாவில்), அகிலாண்டநாயகி, இராஜேஸ்வரி (இறைவரித் திணைக்களம்), கமலாம்பிகை, யோகேஸ்வரன் (முருகன் கமக் களஞ்சியம்), லோகநாயகி (கணக்குப் பதிவாளர்), விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளையதம்பி(சர்வோதயம்), பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ஏரம்பமூர்த்தி, கதிர்காமத்தம்பி (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபாதினி, அஜந்தன், அரவிந்தன், அனந்தன், ஜனனி, தயானி, ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29. - 10 - 1992 முற்பகல் 11.00 மணியளவில் கைதடி மேற்கில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.
[3535]

தகவல்:
வைரமுத்து சின்னத்தங்கம்
(தாய்)

### சீனியர் தெய்வானைப்பிள்ளை
[வெள்ளை ஆச்சி]

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நவக்கிரியில் வசித்து வந்தவருமான திருமதி சீனியர் தெய்வானைப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சீனியரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற முருகுப்பிள்ளை, நாச்சன்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் 27 ஆம் திகதி நடைபெற்று நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகிறேன்.

தகவல்:
சின்னத்துரை மனோகரன்
(இராசன்)
மயிலிட்டி வடக்கு

எல்லாளன்
சனசமூக நிலைய அருகாமை
நவக்கிரி, புத்தூர்.
[3538]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்
## 27. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6329

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:- 26-6796, 26-6398, 43-1019, 41-8292, 24-523, 27-7653, 26-7201, 26 6775, 26-3667, 28-2145, 26-676, 26-506, 26-7525

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:- 24-6663, 42-6226, 24-8558, 22-5857, 43-0916, 24-9671, 26-5493, 27-9136, 26-3321, 26-1735, 42-2323